விமர்சனம் -32

## செனல் 4 மற்றும் எமது ஊடகங்களும்

இலங்கை ஊடகங்களுக்கு பிரிட்டனின் செனல் 4 தொலைக்காட்சி சேவையின் செய்தியொன்று இரண்டாவது முறையாகவும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. கடந்த மே மாம் 9ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு 10ஆம் திகதி இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட செனல் 4 செய்திச்சேவையின் மூன்று ஊடகவியலாளர்கள் தொடர்பான செய்தியொன்றையே முதல் முறையாக எமது ஊடக அறிக்கையிடலுக்கு எடுத்துக்கொண்டோம். இலங்கைக்கு வந்த இந்த ஊடகவியலாளர்கள் வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்கள் முகம் கொடுக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து அறிக்கையிட்டதே இதற்கு காரணமாகும். இந்த அறிக்கையிடலைப் பார்த்த அதிகாரத் தரப்பினரின் பணிப்புரையின் பேரில் உடனடியாக இவர்கள் கைது செய்யப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக இலங்கை ஊடகங்கள் அறிக்கையிட்ட விதம் குறித்து அப்போது நாம் ஆய்வுக்குட்படுத்தினோம். இம்முறை நடைபெற்றுள்ள சம்பவம் அதை விட மோசமானது. இம்முறை அவர்கள் இலங்கை மீது யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடிய வீடியோ காட்சிகளை ஒளிபரப்பியுள்ளனர். அதனால் இது இலங்கை அரசின் கவனத்துக்கும், அபகீர்த்திக்கும் காரணமாகியுள்ளதை இது தொடர்பான ஊடக அறிக்கையிடலை ஆய்வு செய்யும் போது கவனிக்கக் கூடியதாகவிருந்தது. இலங்கையில் மூன்று இலட்சம் மக்களை இடம்பெயரச் செய்த யுத்தம் தொடர்பான அறிக்கையிடல் மூலம் எழுந்த பிரச்சினையாகவுள்ளதால் இப்பிரச்சினையை இலங்கை ஊடகங்கள் கையாண்டுள்ள விதத்தை ஆய்வு செய்வதே எமது நோக்கமாகும்.

செப்டெம்பர் மாதம் முதல் வாரம் முழுவதும் மேற்படி செனல் 4 செய்தி குறித்து மேற்கொண்ட விசாரனைகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரச அதிகாரத் தரப்பினரின் கருத்துக்களடங்கிய செய்திகள் இலங்கை ஊடகங்களில் காணக்கூடியதாகவிருந்த போதும் எமது ஆய்வுக்குட்பட்டது ஆகஸ்ட் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையிலான ஆறு நாட்களில் வெளிவந்த செய்திகளாகும். ஆகஸ்ட் 25ஆம் திகதி வீடியோ நாடா ஒளிபரப்பப்பட்ட பின்னர் இலங்கை அச்சு ஊடகங்கள் இது குறித்து 27ஆம் திகதியே முதன் முறையாக செய்தி வெளியிட்டன. சகல செய்திகளையும் ஆய்வு செய்த பின்னர் வீடியோ நாடாக்கள் மூலம் ஒளிபரப்பப்பட்டது இராணுவ சீருடையில் இருந்த நபரொருவரால் நிராயுத பாணியான தமிழ் இளைஞர்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட விதத்தையென்பதை அனுமாணிக்கக் கூடியதாகவிருந்தது. இது ஜனவரி மாதம் இடம்பெற்ற சம்பவமென்றும், செல்லிடத் தொலைபேசி மூலம் படமாக்கப்பட்டதென்றும், இதைப் பெற்றுக் கொடுத்தது இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பென்றும் இச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதிக்குள் ஐந்து சிங்களப் பத்திரிகைகளில் செய்தி / கட்டுரைகள் / ஆசிரியர் தலையங்கங்கள் என 9 ஆக்கங்களை காணக்கூடியதாகவிருந்ததுடன் வீடியோ நாடாவில் காணப்பட்ட விடயங்கள், அதற்கு அதிகாரத்தரப்பினர் வெளியிட்ட கருத்துகள் அதேபோல் சர்வதேச ரீதியில் இதனால் ஏற்பட்ட அழுத்தங்கள் போன்றவை குறித்து பக்கச்சார்பற்ற ஆய்வை மேற்கொண்டது. பத்தி கட்டுரையின் ஒரு பகுதியாக மாத்திரமே. ஒரு மனிதாபிமானமற்ற சம்பவம் அடங்கிய வீடியோ காட்சி" என்ற வசனத்தையும் வீடியோவிலுள்ள காட்சியை குறிப்பிடும் போது பாவிக்கப்பட்டுள்ள மொழி நடையையும் கவனிக்கும் போது அனுதாபத்துடன் பார்த்திருப்பது தெளிவாகின்றது. அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகை மூன்று செய்திகளை வெளியிட்டிருப்பதுடன் அதிகாரத் தரப்பினரின் எதிர்ப்பை மாத்திரம் அதற்கு மூலங்களாக பயன்படுத்தியுள்ளன. வீடியோவிலுள்ள காட்சிகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும் அதைப் பெற்றுக் கொடுத்தது யார் என்பது குறித்து பரஸ்பரம் வித்தியாசமான இரண்டு கருத்துகள் அச்செய்திகளில் காணப்படுகின்றன. அந்த நிகழ்ச்சியிலேயே வீடியோ நாடாவைப் பெற்றுக் கொடுத்தது இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு என குறிப்பிட்டதாக ஏனைய பல பத்திரிகைகள் செய்தி வெளியிட்ட போதும் ஒரு பத்திரிகை ஜெர்மனி மற்றும் பிரான்ஸில் வசிக்கும் என்.ஜீ.ஓ. ஊடகவியலாளர் இருவர் அதைப் பெற்றுக் கொடுத்ததாக செய்தி வெளியிட்டுள்ளது. செனல் 4 சம்பவத்தின் பின்னணியில் "சுதந்திரத்துக்கான மேடை" என்ற அமைப்பின் சிலர் இருப்பதாக மேலுமொரு பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில் தெரிவித்துள்ளது. மேலுமொரு பத்திரிகையில் இரண்டு செய்திகள் வெளிவந்திருந்தாலும்

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

அப்பத்திரிகையை மாத்திரம் வாசிக்கும் வாசகர்கள் வீடியோ நாடாக்கள் குறித்து எதுவும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அறிக்கையிடப்படவில்லை. அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவை மேற்கோள்காட்டிய செய்தியொன்றில் "இலங்கை இராணுவத்தினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில்" என்ற வாசகம் சேர்க்கப்பட்டிருப்பதால் அது இராணுவத்தினரைப் பற்றியது என அனுமானிக்க வேண்டிய நிலை வாசகர்களுக்கு ஏற்படுகின்றது. மற்றைய செய்தியில் வீடியோ நாடாவை முழு உலகுக்கும் ஜெர்மனியிலுள்ள சிங்களப் புலிகள் வழங்கியதாக தலைப்புச் செய்தியிலேயே தெரிவித்துள்ளது. இரண்டு நாளாந்தப் பத்திரிகைகள் இக்காலவரையறைக்குள் எதுவித செய்தியையும் வெளியிடவில்லை.

சிங்களப் பத்திரிகைகளை விட அதிகமாக ஆங்கிலப் பத்திரிகைகள் தலைப்புச் செய்தி உட்பட 11 செய்திகளையும் 2 ஆசிரியர் தலையங்கங்களையும் ஒரு கேலிச் சித்திரத்தையும் வீடியோவிலிருந்து பெறப்பட்ட இளைஞர்கள் கொல்லப்படும் புகைப்படங்கள் இரண்டையும் வெளியிட்டுள்ளன. இரண்டு ஆசிரியர் தலையங்கங்களிலும் இதுபோன்ற வீடியோ காட்சிகளை வெளியிட்டதை விமர்சிக்கப்பட்டுள்ளது. கேலிச் சித்திரத்தில் யுத்த வெற்றிக்கென்றால் விருதென்றும் யுத்த குற்றத்துக்கென்றால் குப்பை கூடையில் வீசுதலென்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்பத்திரிகை மாத்திரமே இச்சம்பவத்தை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக அரசு வெளியிட்ட அறிக்கையை மூலமாகக் கொண்ட செய்தியை முதல் நாள் உட்பக்கமொன்றில் வெளியிட்ட அப்பத்திரிகை அறிக்கையில் காணப்பட்ட கருத்தை சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை விடத் தெளிவாக வெளியிட்டுள்ளது. வீடியோ காட்சியிலுள்ளவற்றை குறிப்பிடும் அச்செய்திக்கு இராணுவத்தினரின் பொறுப்பை பாராட்டும் இராணுவப் பேச்சாளர் மற்றும் பிரெஞ்சு செய்திச் சேவையின் செய்தியையும் மூலமாக காட்டப்பட்டுள்ளது. அந்தப் பத்திரிகை இரண்டாவது முக்கிய செய்தியாக செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இச்சம்பவம் தொடர்பாக தெரிவித்த கருத்தை வெளியிட்டுள்ளது. முதற் செய்தியில் தெரிவிக்கப்பட்டபடி வீடியோ காட்சியில் காட்டப்பட்டது, அதைப் பெற்றுக் கொடுத்தவர்கள், அதற்கு ஏனைய சர்வதேச ஊடகங்கள் மூலம் முக்கியத்துவமளிக்கப்பட்டது போன்ற விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அமைச்சர் மேற்குலக ஊடக அமைப்புக்களுக்கு எச்சரிக்கை விடுத்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எப்படியிருந்தும் இச்செய்திகளில் சிங்கள ஊடகங்களை விட தெளிவாக இச்சம்பவத்தை வாசகர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாகவிருப்பதுடன் செய்திகள் அனைத்தையும் ஆய்வு செய்தபோது செனல் 4 தொலைக்காட்சி சேவை தவறு செய்துள்ளதென அப்பத்திரிகை ஏற்றுக் கொண்டுள்ளதென்பது தெளிவாகின்றது. இரண்டு புகைப்படங்களை வெளியிட்டுள்ள வார இறுதி ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியை ஆய்வு செய்த போது மேற்கூறப்பட்ட பத்திரிகைச் செய்தியை ஓரளவு ஒத்திருந்தது. மேலுமொரு ஆங்கிலப் பத்திரிகையின் செய்தி விஷேடமாக குறிப்பிடக் கூடியதாகவுள்ளது. அது டொரென்டோ ஸ்டார் என்ற பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை எனத் தெரிகிறது. அக்கட்ரையில் பல மூலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கனடாவின் மூலம், இலங்கை அரசின் அறிக்கை, செனல் 4 ஊடகவியலாளர் ஜொனதன் மிலர், ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதி போன்ற மூலங்களும் இதில் காட்டப்பட்டுள்ளன. இவ் வீடியோ காட்சியில் காட்டப்பட்டது புதியதல்லவென்றும் இது போன்ற நிகழ்வுகள் சில காலமாக இடம்பெறுவதற்கு இது ஒரு உதாரணமாகுமெனு ஒரு மூலத்தில் கூறப்படுகிறது. எப்படியிருந்தும் இக்கட்டுரையில் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெறலாமென்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகவே கூறப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகங்களின் அறிக்கையிடல் எண்ணிக்கையளவில் ஏனைய ஊடகங்களை விட அதிகமாகக் காணப்படுகிறது. இரண்டு தலைப்புச் செய்திகளும், 17 செய்திகளும் ஒரு புகைப்படமும் இவற்றிலடங்கும். இருந்தும் சம்பவத்தை மறுக்கும் ஒரு செய்தி மாத்திரம் அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எப்படியிருந்தும் குறிப்பிடக்கூடியது என்னவென்றால், வீடியோ காட்சி தொடர்பான முதற் செய்திக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில் ஒரு பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது தான். அந்த வீடியோ நாடாவின் உள்ளடக்கத்தை நியாயப்படுத்தும் சர்வதேச மூலங்கள் பலவற்றை அச்செய்திக்கு மூலமாக பாவித்துள்ளதுடன் இதன்மூலம் சர்வதேச விசாரனை தேவையெனவும் அச்செய்தியில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் இலங்கை தரப்பு அதை மறுத்திருப்பதையும் ஏனைய ஊடகங்களை விட அதிகளவில் செய்தியாக வெளியிட்டுள்ளன. மேற்கூறிய பத்திரிகை வெளியிட்டுள்ள மற்றுமொரு செய்தியில் கொலைகளுக்கு செனல் 4

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

வீடியோ சாட்சியாகவிருப்பதால் மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமெனத் தெரிவித்துள்ளது. இச்செய்திக்கு இந்திய அரசியல்வாதியான வைகோவை மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. தலைப்பிடும் போது வீடியோ காட்சிக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு பத்திரிகைகளும் வீடியோ காட்சியில் காணப்பட்டது, அரசின் மறுப்பு போன்ற செய்திகளுடன் வெளிநாட்டு பிரதிநிதிகள் இது தொடர்பாக தெரிவித்த கருத்துக்களையும் வெளியிட்டுள்ளது. எப்படியிருந்தும் ஏனைய ஊடகங்களை விட இவ்விடயம் தொடர்பாக தமிழ் ஊடகங்கள் கவலையடைந்துள்ளது போல் தெரிகிறது. எதிர்கட்சி, மற்றும் ஏனைய கட்சிகள் கவலையுடன் தெரிவித்த கருத்துக்களை செய்தியாக வெளியிட்டதன் மூலம் இது தெளிவாகின்றது. அதிகாரத்தரப்பினரின் அனுமதியின் பேரில் பெற்றுக் கொடுத்த யுத்த களச் செய்திகள் மற்றும் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பல விடயங்கள் இலங்கையருக்கும் உலகத்துக்கும் இரகசியமாகவேயுள்ளது. இடம்பெயர்ந்தோர் வாழும் முகாம்கள் இன்னும் உலகத்துக்கு அனுமதிக்கப்படாதது இரகசியமாகவுள்ளது. இரகசியமாக வைத்துக்கொள்ள முயற்சிக்கும் விடயங்கள் பல்வேறு வழிகளில் வெளிவருகின்றன. இது போன்ற நிலையின் கீழ் இது குறித்து கவலைப்படுபவர்களுக்கு இது போன்ற சம்பவம் குறித்து சந்தேகம் ஏற்படுவதில்லை. இது குறித்தே ஊடகங்கள் கவனம் செலுத்த வேண்டும். இச்சம்பவம் குறித்து ஒரேயடியாக அப்படி நடக்கவில்லை என மறுப்பு தெரிவிப்பதை அறிக்கையிடுவதுடன் நின்றுவிடாமல் ஒரு தரப்பில் நின்று அவர்களை விமர்சிக்காமல் நடந்தவற்றை ஆராய்ந்து மக்களுக்கு உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதே ஊடகங்களின் பொறுப்பாகும்.

**சீதா ரஞ்சனி**
**seetha@cpalanka.org**

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com